செ.வெ.எண்-23 நாள்-21.11.2020

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில், 2020-21-ஆம் ஆண்டிற்கு தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தொழில்முனைவோர் மேம்பாட்டுக்கான நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் முதற்கட்டமாக, ஒரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து அதிகபட்சமாக 3 பயனாளிகள் என அரியலூர் மாவட்டத்தில் உள்ள 6 ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து 15 பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

இத்திட்டத்தில் தேர்வு செய்யப்படும் ஒவ்வொரு பயனாளிக்கும், ஒரு நாள் வயதுடைய நாட்டுக் கோழிக்குஞ்சுகள் 1000 எண்ணம் வாங்குவதற்கான தொகையில் 50% மானியத்தொகை ரூ.15,000/-, ஒரு மாதத்திற்கு கோழித் தீவனம் வாங்குவதற்கான தொகையில் 50% மானியத்தொகை ரூ.22,500/- மற்றும் கோழிக்குஞ்சு பொறிப்பான் (Incubator) வாங்குவதற்கான அதிகபட்சத் தொகை ரூ.75,000/-ல் 50% மானியத்தொகை ரூ.37,500/- வழங்கப்படும். கோழிகளுக்கு உணவு மற்றும் தண்ணீர் வழங்கும் சாதனங்களை (Feeder & Waterer) பயனாளியே தனது சொந்த செலவில் கொள்முதல் செய்து கொள்ள வேண்டும். சேவல் கோழிகளை குறைந்தது 16 வாரங்களுக்கும், பெட்டை கோழிகளை குறைந்தது 72 வாரங்களுக்கும் பயனாளி வளர்க்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் பயனாளியாவதற்கான தகுதிகள் குறைந்ததது 2500 சதுர அடி (ஒரு கோழிக்குஞ்சுக்கு 2.5 சதுர அடி வீதம்) அளவுள்ள கோழிக் கொட்டகை (Night Shelter) வைத்திருக்கும், நாட்டுக்கோழி வளர்ப்பில் அனுபவமுள்ள / ஆர்வமுள்ள விவசாயிகள். சம்மந்தப்பட்ட கிராமத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். இத்துறையின் மூலம் 2012 முதல் 2017-ஆம் ஆண்டு முடிய காலங்களில் செயல்படுத்தப்பட்ட கோழி அபிவிருத்தித் திட்டத்தில் பயன் பெறாதவராக இருத்தல் வேண்டும். மூன்று ஆண்டுகளுக்கு குறையாமல் கோழிப் பண்ணையை செயல்படுத்துபவராக இருத்தல் வேண்டும். விதவை, ஆதரவற்றோர், மூன்றாம் பாலினத்தவர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தேர்வு செய்யப்படும் பயனாளிகளில் **30%** (SC/ST) ஆதிதிராவிடர் / பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவர் தேர்வு செய்யப்படுவர்.

மேற்படி திட்டத்தில் பயனடைய விரும்பும் நபர்கள் அவர்களது கிராமத்திற்கு அருகாமையில் உள்ள அரசு கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரிடம் 27.11.2020-க்குள் விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**